# 12 தோத்திரப் பாடல்கள்

பக்தியாளன் தனது பக்தியை இறைவன்பால் திருப்பி இறைவனது மகிமைகளைப் போற்றிப் பாடிய பாடல்கள் தோத்திரப் பாடல்கள் எனப்படும். அத்தகைய பக்திப் பாடல்கள் சங்க காலம் முதல் இன்று வரையும் இருந்து வருகின்றன. சங்க காலம் முதல் சோழர் காலம் வரை பாடப்பட்ட தோத்திரப் பாடல்களில், பல தொகுக்கப்பட்டு பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அத்தொகுப்பு முறையில் அடங்காதவை, தோத்திரப் பாடல்கள் என அழைக்கப்படும். அவ்வகையில் சங்கப் பாடல் சிலவும் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின் எழுந்த பக்திப் பாடல்களும் அடங்கும். குமரகுருபரர், அபிராமிப்பட்டர், தாயுமானவர் முதலியோர் பாடிய பாடல்களும் தோத்திரப் பாடல்களே ஆகும். தோத்திரப் பாடல்களான திருப்புகழ், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை என்பவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்களை இங்கு கற்போம்.

## அ. திருப்புகழ்

தோத்திரப் பாடல்களுள் ஒன்றான திருப்புகழ் முருகப்பெருமானின் புகழ் கூறும் பாடல்களைக் கொண்டது. அது சந்தச் சிறப்பு வாய்ந்தது. ஆலயங்களில் பஞ்ச புராணம் ஓதிய பின்னர், திருப்புகழ் பாடப்படுகின்ற வழக்கம் இக்காலத்தில் காணப்படுகின்றது.

திருப்புகழ், முருகன் அடியார்களில் சிறந்தவரான அருணகிரிநாதரால் பாடப்பட்டது. ‘‘வாக்கிற்கு அருணகிரி’’ என்று அவர் சிறப்பிக்கப்படுகின்றார். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, முருகப் பெருமான் ‘‘நீ திருப்புகழ் பாடு’’ என்று அருணகிரிநாதரை ‘‘முத்தைத்தரு பத்தித் திருநகை...’’ என அடியெடுத்துக் கொடுத்தருளினார். அவர் அறுமுக (முருக)ப் பெருமானின் அருட்டிறத்தைப் பெற்று, 16000 திருப்புகழைப் பாடியருளினார். அன்று தொடக்கம் அவர் பாடியருளிய முருகனின் புகழ் பாடும் பாடல்கள், ‘‘திருப்புகழ்’’ எனப் பெயர் பெற்றன.

திருப்புகழ் என்பது முருகப் பெருமானின் திருதக்கப் புகழைக் கூறும் நூல் என்று பொருள் கூறுவர். தமிழகத்தில் திருவண்ணாமலை, பழனி, திருச்செந்தூர், திருத்தணிகை, இலங்கையிற் கதிர்காமம் முதலான தலங்கள் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார். அவர் முருகன் மீது பாடியருளிய பிற நூல்களுள் கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவகுப்பு முதலானவை அடங்கும்.

திருப்புகழ் பாடல்கள் பலவற்றை நீங்கள் மனனம் செய்து, சந்தத்துடன் பாடி, முருகன் அருள் பெற வேண்டும். ‘‘கைத்தல நிறைகனி...’’ என்ற விநாயகர் துதி விநாயகப் பெருமானை வழிபடும்போது பாடக் கூடியதாகும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## திருப்புகழ்
## (விநாயகர் துதி)

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
    கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
    கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
    மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
    மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
    முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
    அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
    அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
    அக்கண மணமருள் பெருமாளே.

**பதவுரை :**

கைத்தலம் - திருக்கரத்திலே; நிறைகனி - நிறைந்த கனிகளையும்; அப்பமொடு அவல் பொரி - அப்பத்தோடு அவல், பொரி என்பவற்றை; கப்பிய - உண்ணுகின்ற; கரிமுகன் - யானை முகத்தையுடைய விநாயகப் பெருமானது; அடி பேணி - திருவடிகளை விரும்பித் தொழுது; கற்றிடும் அடியவர் - (அறிவு நூல்களை) ஓதுகின்ற அடியவர்களது; புத்தியில் உறைபவர் - அறிவினிடத்தில் கலந்து வாழ்கின்றவரே; கற்பகம் - கற்பகத்தருவைப் போல் அடியவர் நினைத்தவை அனைத்தும் அருள வல்லவரே; முத்தமிழ் அடைவினை - மூன்று தமிழின் முறையினை; முற்படு கிரிதனில் - மலைகளுக்கெல்லாம் முதன்மையானதான மகாமேருமலையில்; முற்பட எழுதிய - எல்லா மொழிகளுக்கும் முதன்மையுற எழுதிய; முதல்வோனே - எல்லாத் தேவர்களுக்கும் முதன்மையானவரே.

முப்புரம் எரிசெய்த - மூன்று புரங்களையும் தழலெழ நகைத்து எரித்தருளிய; அச்சிவன் உறை ரதம் - அந்த (அளவிடற்கரிய புகழையுடைய) சிவபெருமான் ஊர்ந்த இரதத்தினுடைய; அச்சது பொடி செய்த - (தன்னை நினையாத காரணத்தினால்) அச்சை முறித்துப் பொடியாக்கிய; அதி தீரா - மிகுந்த தீரத்தன்மையுடையவரே, அத்துயர் அதுகொடு - இன்பரச சக்தியாகிய வள்ளி நாயகியாரை மணந்து, ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தை அருள வேண்டும் என்கின்ற அந்த இரக்கத்தைக் கொண்டு; சுப்பிரமணிபடும் - முருகக் கடவுள் சென்ற; அப்புனம் அதனிடை - வள்ளி அம்மையார் இருந்த அந்தத் தினைப் புனத்தில்; இபம் ஆகி - யானை வடிவங்கொண்டு; அக் குறமகளுடன் - அந்தக் குற மாதாவாகிய வள்ளி நாயகியாரோடு; அச்சிறு முருகனை - அந்த இளம் பூரணரான முருகனை; அக்கணம் மணம் அருள் - அத்தருணத்திலேயே விவாகமாகுபடி திருவருள் புரிந்த; பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே; என - என்று துதி செய்து வணங்க; வினை கடிதேகும்-தீ வினைகள் விரைவில் நீங்கும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

(ஆதலால்) மத்தமும் - ஊமத்தை மலரையும்; மதியமும் - சந்திரனையும்; வைத்திடும் அரன் மகன் - சடா முடியின் கண் (கருணை கொண்டு) தரித்துள்ள சிவபெருமானது திருக்குமாரராகிய; மல் பொரு திரள் புய - மல் யுத்தம் செய்யும் திரண்ட தோள்களையுடைய; மத யானை - மதங்களைப் பொழிகின்ற யானை முகத்தவரை; மத்தள வயிறனை - மத்தளம் போன்ற அழகிய வயிற்றை உடையவரை; உத்தமி புதல்வனை - உத்தம குணங்களின் வடிவமான உமாதேவியாரது புதல்வனாகத் தோன்றிய மகாகணபதியை; மட்டவிழ் மலர் கொடு - தேன் துளிக்கின்ற மலர்களைக் கொண்டு அர்ச்சித்து; பணிவேன் - வணங்குவேன்.

## பொழிப்புரை

திருக்கரத்திலே நிறைந்துள்ள பழம், அவல், பொரி, அப்பம் முதலியவைகளை அருந்துகின்ற யானை முகத்தினை உடைய கணேச மூர்த்தியின் திருவடிக் கமலங்களை விரும்பித் தொழுது கற்கின்ற அடியவர்களது சித்தத்தில் எப்பொழுதும் நீங்காது வாழ்கின்றவரே! நினைத்ததைத் தரவல்ல கற்பக விருட்சம் போல, (இடைவிடாது துதிக்கும்) தொண்டர்கள் நினைத்தவை எல்லாம் எளிதில் தரவல்ல வள்ளலே எல்லா மொழிகளுக்கும் முற்படுமாறு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் நூல் முறைமையை, மலைகளுக்குள் முதன்மையுடைய மகாமேரு கிரியில் எழுதி அருளிய முதன்மையானவரே!

தேவர்களின் வேண்டுதலுக்காக திரிபுரங்களை புன் சிரிப்பால் எரிகொளுத்திய சிவபெருமான் எழுந்தருளிய, பெரிய தேரின் அச்சை (தன்னை நினையாத காரணத்தினால்) ஒடித்து, துகள் செய்த மிகுந்த தைரியமுடையவரே! வள்ளிப்பிராட்டியாரைத் திருமணம் புரிந்து, உயிர்களுக்கு இன்பத்தை அருள வேண்டுமென்று கருணை கொண்டு, தினைப்புனத்திற்குச் சென்ற குமாரக்கடவுள், வள்ளிப் பிராட்டியார் இசையாமையால் (இவ்வேளை துணை செய்ய வேண்டுமென குமாரக் கடவுள் நினைக்க) யானை வடிவங் கொண்டு சென்று, குறவர் குடியிற் தோன்றிய வள்ளிநாயகியாருடன் என்றும் இளைய பெருமாளாகிய அறுமுகக் கடவுளை மணஞ் செய்வித்து திருவருள் பாலித்த பெருமையிற் சிறந்தவரே! உன்னைத் துதித்தால் (துன்பத்தை விளைக்கும்) வினைகள் அனைத்தும் விரைவில் விலகும்.

ஆதலால், ஊமத்தை மலரையும் சந்திரனையும் சடாமகுடத்தில் கருணை கொண்டு சூடிக் கொண்டுள்ள சிவபெருமானின் திருக்குமாரரும், மல்யுத்தம் புரிகின்ற திரண்ட தோள்களை உடையவரும், மதங்களைப் பொழிகின்ற யானை முகத்தை உடையவருமாகிய விநாயகப் பெருமானை, மத்தளம் போன்ற அழகிய திருவுதரத்தை உடையவரை, உத்தமியாகிய உமாதேவியாரது அருட்புதல்வரை, தேன் துளிக்கும் புதுமலர்களால் அர்ச்சித்து வணங்குவேன்.

**ஆ. அபிராமி அந்தாதி** தமிழில் தெய்வங்களைத் தோத்திரம் பாடி வழிபாடு செய்ய, பல பிரபந்தங்கள் உள்ளன. அவற்றுள் அபிராமி அந்தாதியும் ஒன்று. அது திருக்கடவூரில் வாழ்ந்த **அபிராமிப்பட்டர்** என்ற தேவி பக்தரால், அபிராமி அன்னையைப் போற்றித் துதித்துப் பாடப்பட்டதாகும். அதில் அந்தாதித் தொடராக நூறுபாடல்கள் உள்ளன.

அபிராமி அந்தாதி என்னும் இப்பிரபந்தம் பக்தி நயம், சொல் நயம் யாவும் ஒரு சேர அமைந்து உள்ளத்தினை உருக்குவது. அப்பாடல்களைப் பாராயணம் செய்து, அபிராமி அன்னையை உள்ளம் உருகத் துதித்தால் மனச்சுமைகள் குறையும்; இடர்கள் நீங்கும். எனவே, உலகத் துன்பங்களில் சிக்குண்டு மக்கள் நிம்மதி இல்லாமல் தவிக்கும் இன்றைய கால கட்டத்தில், துன்பம் நீங்கி, நிம்மதி ஏற்பட இப்பாடலையும், அபிராமி அந்தாதியிலுள்ள ஏனைய பாடல்களையும் பாராயணம் செய்ய வேண்டும். அபிராமி அந்தாதி என்றவுடன் எல்லோர் சிந்தனையிலும் வருவது ''தனம் தரும்...'' என்ற அறுபத்தொன்பதாவது (69) பாடலாகும். அப்பாடல் சகல சௌபாக்கியங்களையும் தரவல்லது; நல்லறிவை ஏற்படுத்தவல்லது.

தனந்தரும் கல்வி தரும்ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்
தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்
அபிராமி கடைக்கண்களே.

**பதவுரை :**

கனந்தரும் - கரிய நிறத்தைத் தரும்; பூங்குழலாள் - பூவை அணிந்த கூந்தலையுடைய அபிராமி அம்மை; கடைக்கண்கள் - திருக்கடைக்கண்கள் ; அன்பர் என்பவர்க்கே - தம் மெய்யடியார்கள் என்று சிறப்பித்துச் சொல்பவர்களுக்கு; தனந் தரும் - எல்லா வகையான ஐஸ்வரியங்களையும் தரும்; கல்வி தரும் - கல்வியை வழங்கும்; ஒரு நாளும் - ஒரு நாளேனும்; தளர்வு அறியா - சோர்வறியாத; மனந் தரும் - மனத்தைத் அளிக்கும்; தெய்வ வடிவுந்தரும் - தெய்வத் தன்மை பொருந்திய பேரழகையும் வழங்கும்; வஞ்சம் நெஞ்சில் இல்லா இனம் தரும் - (கபட சித்தம் இல்லாத) வஞ்சகமில்லாத மனைவி கணவன், மக்கள் முதலான சுற்றம், உற்றார், உறவினர்களைக் கொடுக்கும். அத்துடன் நல்லவையாக இருப்பவை எவை எவையோ, அவற்றை எல்லாம் அளவின்றிக் கொடுக்கும்.

## பொழிப்புரை :

கார்மேகத்தைப் போன்று, பூவை அணிந்த கூந்தலை உடைய அபிராமி அம்மையின் கடைக்கண்கள், அத்தேவியின் மெய்யன்பர்களுக்கு எல்லா வகையான செல்வங்களையும் தரும்; கல்வியைக் கொடுக்கும்; தெய்வீக அழகை வழங்கும்; அத்துடன் நல்லவையாக இருப்பவை எவை எவையோ அவை எல்லாவற்றையும் வழங்கும்.

**தாற்பரியம் :**

நாம் வாழ்க்கையில் கடைத்தேற, அபிராமி அன்னையின் கடைக்கண்களின்பார்வை ஒன்றே போதுமானது. அது இம்மை, மறுமை இன்பத்தையும் கொடுக்கவல்லது என்பதாம்.

## இ. சகலகலாவல்லி மாலை

கல்வித் தெய்வம் சரஸ்வதி தேவி. அத் தெய்வம் மீது குமரகுருபரர் பாடிய பிரபந்தம் **சகலகலாவல்லி மாலை** ஆகும். இப்பிரபந்தம் **சரஸ்வதி தோத்திரம்** எனவும் வழங்கப்படும்.

குமரகுருபரர் ஒருமுறை காசிக்குச் சென்றிருந்தார். அப்பொழுது, அங்கு வாழ்ந்த சைவ மக்கள் பல துன்பங்களை அனுபவிப்பதைக் கண்டார், அதனை ஆட்சியில் இருந்த தில்லி பாதுஷாவுக்கு எடுத்துரைக்கச் சென்றார். எனினும், அவர் அரசனின் மொழியான ஹிந்துஸ்தானி மொழியை அறியாதிருந்தார். அதனால், அம் மொழியினை அறியும் பொருட்டு, கலைமகளின் அருளை வேண்டி, சகலகலாவல்லி மாலையைப் பாடினார்.

''சொல் விற்பனமும்....'' என்ற பாடல் சகலகலாவல்லி மாலையில் உள்ள எட்டாவது பாடலாகும். அதனை இப்பாடத்தில் கற்போம்.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

**பதவுரை** :

சொல் விற்பனமும் - நாவன்மையும்; அவதானமும் - நினைவாற்றலும்; கவி சொல்லவல்ல நல் வித்தையும் - கவி பாடுவதற்கு வேண்டிய நல்ல புலமையும்; தந்து அடிமை கொள்வாய் - அடியேனுக்குத் தந்து, அடியேனை ஆட்கொண்டருள்வாய்; நளின ஆசனஞ் சேர் செல்விக்கு அரிது - வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் சரஸ்வதிதேவிக்கு அரிதானதன்று மிக எளிதே; என்றொரு காலமுஞ் சிதையாமை நல்குங் கல்விப் பெருஞ்செல்வப் பேறே - என்னும் படி எக்காலத்திலும் அழிவற்ற கல்வியாகிய பெருஞ் செல்வப் பேறாக அமைந்து, அதனைத் தர வல்லவளான; சகல கலாவல்லியே - சகல கலைகளிலும் வல்லவளாகிய கலைமகளே.

**பொழிப்புரை** :

வெண்டாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய சரஸ்வதி தேவிக்கு நிலைபேறுடைய கல்விச் செல்வத்தைத் தருவது அரியதன்று எளிதானது. அத்தகைய அழிவற்ற கல்விப் பேற்றைத் தரும் கல்விச் செல்வியே, சகலகலாவல்லியே, எனக்கு நாவன்மையும் அட்டாவதானமும் கவிபாடும் ஆற்றலும் நல்ல பல வித்தைகளும் ஆகிய பேறுகளைத் தந்தருள்வீராக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பாடச் சுருக்கம்

- பக்தன் தனது பக்தியை இறைவன் பால் திருப்பி, இறைவனுடைய மகிமைகளைப் போற்றிப் பாடிய பாடல்கள் தோத்திரப் பாடல்களாகும். பன்னிரு திருமுறைத் தொகுப்பில் அடங்காதவை தோத்திரப் பாடல்கள் என வழங்கப்படுகின்றன.
- திருப்புகழில் இடம் பெற்றுள்ள விநாயகர் துதி, விநாயகர் வழிபாட்டின் போது பாடப்படவேண்டியது.
- தரப்பட்டுள்ள தோத்திரப் பாடல்களைப் பக்தியுடன் நாள்தோறும் பாடி வழிபட்டால் விநாயகர், அபிராமி அன்னை, சரஸ்வதி தேவி முதலிய தெய்வங்களின் திருவருள் கிடைக்கும்.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. 'தோத்திரப் பாடல்கள்' என்பதற்கு விளக்கம் தருக.
2. நீங்கள் அறிந்த தோத்திர நூல்கள் நான்கினையும் அவற்றைப் பாடியோர்களையும் குறிப்பிடுக.
3. 'திருப்புகழ்' என்பதன் விளக்கம் யாது?
4. திருப்புகழ் பாடப்பட்ட தலங்கள் ஐந்தினைத் தருக.
5. அருணகிரிநாதர் பாடியருளிய திருப்புகழ் தவிர்ந்த, ஏனைய நூல்களைப் பட்டியற்படுத்துக.
6. 'அபிராமி அந்தாதி' என்ற பிரபந்தத்தின் சிறப்புகளை எழுதுக.
7. அபிராமி அன்னையின் அருள்கிட்டுவதால் கிடைக்கும் பேறுகளைப் பட்டியற்படுத்துக.
8. 'சரஸ்வதி தோத்திரம்' என அழைக்கப்படும் பிரபந்தம் எது? அதனைப் பாடும் காலத்தை எழுதுக.
9. 'சகலகலாவல்லி மாலை' என்ற பிரபந்தம் பாடப்பட்டமைக்கான சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

## ஆ. செயற்பாடு

- தோத்திரப் பாடல்கள் மூன்றினையும் மனனம் செய்து, பக்தியுடனும் சந்தம் அல்லது இசையுடனும் பாடிக் காட்டுக. அப்பாடல்களின் பொழிப்புரையையும் கூறுக.
- எமது சமய மக்களின் நிம்மதிக்காக நாள்தோறும் இத்தோத்திரங்களைப் பாடி வழிபாடு செய்க.
- நீங்கள் எந்தச் செயலைச் செய்யமுன்பும் விநாயகரை வழிபடும் பழக்கத்தைக் கடைபிடிக்க.
- நீங்கள், சரஸ்வதி தேவியிடம் வேண்டுகின்ற பேறுகளைப் பட்டியற்படுத்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக